எட்டாம் வகுப்பு - தமிழ் ( இயல் 1-5 வினா விடை)

சரியான விடையைத் தேர்க.

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்

வைப்பு

2) என்றென்றும் - எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

என்று + என்றும்

3) வானமளந்தது - எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

வானம் + அளந்தது

4) அறிந்தது + அனைத்தும் என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அறிந்ததனைத்தும்

5) வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

வானமறிந்த

6) ' மறம் பாட வந்த மறவன்' என்று பாரதியாரைப் புகழ்ந்தவர்

பாரதிதாசன்

7) பறவைகள்................. பறந்து செல்கின்றன.

விசும்பில்

8) இயற்கையைப் போற்றுதல் தமிழர் .................

மரபு

9) இருதிணை - பிரித்தெழுதுக.

இரண்டு+ திணை

10) ஐம்பால் எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

ஐந்து + பால்

11) நிலம் தீ நீர் வளி விசும்போடு - இதில் விசும்பு எனும் சொல்லின் பொருள்

வானம்

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

12) தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ........ காரணமாக அமைந்தது.

அச்சுக்கலை

13) வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து.......என அழைக்கப்படுகிறது.

வட்டெழுத்து

13) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்

தந்தை பெரியார்

14) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்கள்......... என அழைக்கப்பட்டன.

கண்ணெழுத்துகள்

15) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர்

வீரமாமுனிவர்

16) " கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி* - இத்தொடர் இடம்பெற்ற நூல்

சிலப்பதிகாரம்

17) தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என்பதற்குச் சான்று

அரச்சலூர் கல்வெட்டு

18) தமிழ் எழுத்துகளில் மிகப்பெரிய சீர்திருத்தத்தைச் செய்தவர்

வீரமாமுனிவர்

19) இதழ்கள் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள்......... உ, ஊ

20) ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ......... தலை

21) வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ....... மார்பு

22) நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்து.....

ட், ண்

23) கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து....... வ்

24) மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுவதால் பிறக்கும் எழுத்து.... ள்

25) பள்ளிக்குச் சென்று கல்வி.............சிறப்பு. பயிலுதல்

26) செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது.....

ஓடை

27) நன்செய் எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது... நன்மை+ செய்

28) நீளுழைப்பு - பிரித்தெழுதுக. நீள் + உழைப்பு.

29) சீருக்கு + ஏற்ப - சேர்த்தெழுதுக. சீருக்கேற்ப

30) ஓடை + ஆட - சேர்த்தெழுதுக. ஓடையாட.

31) தமிழகத்தின் வேர்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் யார் ?

வாணிதாசன்

32) வாணிதாசன், பிரெஞ்சு அரசு மூலம் பெற்ற விருது........ செவாலியர் விருது.

33) வானின் கரு..............தோன்றினால் மழை பொழியும் என்பர். முகில்

34) முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ............. யும் ஓட்டிவிடும்.

காலனை

35) விழுந்ததங்கே - பிரித்தெழுதுக. - விழுந்தது + அங்கே

36) செத்திறந்த - பிரித்தெழுதுக. - செத்து + இறந்த.

37) பருத்தி + எல்லாம் - சேர்த்தெழுதுக. - பருத்தியெல்லாம்

38) பஞ்சகும்மிகள் என்னும் நூலினைத் தொகுத்தவர் யார் ? புலவர் செ.இராசு

39) செவ்விந்தியர்கள் நிலத்தைத்............மதிக்கின்றனர். தாயாக

40) இன்னோசை - பிரித்தெழுதுக. - இனிமை + ஓசை

41) பால் + ஊறும் - சேர்த்தெழுதுக. - பாலூறும்

42) அமெரிக்காவில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள்.............. பழங்குடியினர்.

சுகுவாமிஷ்.

43) சுகுவாமிஷ் பழங்குடியினரின் தலைவராக விளங்கியவர்.......... சியாட்டல.

44) தமிழகப் பழங்குடிகள் என்னும் நூலின் ஆசிரியர் யார் ?

பக்தவத்சல பாரதி

45) மாடு வயலில் மேய்ந்தது- இதிலுள்ள வினைமுற்று.......... மேய்ந்தது

46) பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று............ படித்தான்

47) பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல்....... ஓடு

48) புகழாலும் பழியாலும் அறியப்படுவது................... நடுவுநிலைமை

49) பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள்......... கல்லாதவர்

50) வல்லுருவம் - பிரித்தெழுதுக. வன்மை + உருவம்

51) நெடுமை + தேர் - சேர்த்தெழுதுக. நெடுந்தேர்

52) வருமுன்னர் எனத்தொடங்கும் குறளில் பயின்று வரும் அணி.....

உவமை அணி

53) கடல்ஓடா எனத்தொடங்கும் குறளில் பயின்று வரும் அணி......

பிறிது மொழிதல் அணி

54) உடல்நலம் என்பது...........இல்லாமல் வாழ்தல் ஆகும். பிணி

55) நீலகேசி கூறும் நோயின் வகைகள்.......... மூன்று

56) இவையுண்டார் - பிரித்தெழுதுக. இவை + உண்டார்

57) தாம் + இனி. - சேர்த்தெழுதுக. தாமினி

58) நீலகேசி எம்மதக் காப்பியம் ? சமணசமயம்

59) ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் - இத்தொடரில் ஓர்தல் எனும் சொல்லின் பொருள்

நல்லறிவு

60) காந்தியடிகள் ........... போற்ற வாழ்ந்தார். வையம்.

61) நலமெல்லாம் - பிரித்தெழுதுக. நலம் + எல்லாம்

62) இடம் + எங்கும் - சேர்த்தெழுதுக. இடமெங்கும்

63) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மொழிபெயர்த்த நூல்.... உமர்கய்யாம் பாடல்கள்.

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

64) தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு............. பயன்படுத்தினர்.

தாவரங்களைப்

65) தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது...........நீட்சியாகவே உள்ளது.
உணவின்

66) உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று.
இரத்தக்கொதிப்பு.

67) சமையலறையில் செலவிடும் நேரம்..........செலவிடும் நேரமாகும்.
நல்வாழ்வுக்காக

68) முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல்.......... எச்சம்.

69) கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம்........... பார்த்த

70) குறிப்பு வினையெச்சம்........... வெளிப்படையாகக் காட்டாது. காலத்தை

71) கற்றவருக்கு அழகு தருவது.......... கல்வி

72) கலனல்லால் - பிரித்தெழுதுக. கலன் + அல்லால்

73) என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ............ இன்றி வாழ்ந்தார்.
அகம்பாவம்

74) கோயிலப்பா - பிரித்தெழுதுக. - கோயில் + அப்பா

75) பகைவன் + என்றாலும் - சேர்த்தெழுதுக. - பகைவனென்றாலும்

76) அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது.......... கல்வி

77) கல்விப் பயிற்சிக்குரிய பருவம்............ இளமை

78) இன்றைய கல்வி ............. நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
தொழிலில்

79) கலப்பில் ........... உண்டென்பது இயற்கை நுட்பம். வளர்ச்சி

80) புற உலக ஆராய்ச்சிக்கு...........கொழுகொம்பு போன்றது. அறிவியல்

81) வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது ..........இன்பம் ஆகும்.
காவிய

82) ஐ.நா.அவையின் முதல் பெண் தலைவர்.......... விஜயலட்சுமி பண்டிட்

83) பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது.......... வேற்றுமை

84) எட்டாம் வேற்றுமை.......... வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது. விளி

85) உடனிகழ்ச்சிப் பொருளில்........ வேற்றுமை வரும். மூன்றாம்

86) ' அறத்தான் வருவதே இன்பம்' இத்தொடரில்.............. வேற்றுமை பயின்று வந்துள்ளது. மூன்றாம்

87) மலர் பானையை வனைந்தாள்- இத்தொடர் ............ பொருளைக் குறிக்கிறது. ஆக்கல்

88) Ornament என்பதற்கான கலைச்சொல்............. அணிகலன்

89) காட்டிலிருந்து வந்த ........ கரும்பைத் தின்றன. வேழங்கள்

90) கனகச்சுனை - பிரித்தெழுதுக. கனகம் + சுனை

91) முழவு + அதிர - சேர்த்தெழுதுக. முழவதிர

92) நம்பியாரூரர், தம்பிரான் தோழர் எனும் சிறப்புப்பெயர்களால் அழைக்கப்படுபவர். சுந்தரா

93) பசியால் வாடும்....... உணவளித்தல் நமது கடமை. அலந்தவர்க்கு

94) நம்மை.........பொறுத்துக் கொள்ள வேண்டும். இகழ்வாரைப்

95) மறைபொருளைக் காத்தல் ,..........எனப்படும். நிறை

96) பாடறிந்து - பிரித்தெழுதுக. - பாடு + அறிந்து

97) முறை+ எனப்படுவது - சேர்த்தெழுதுக. - முறையெனப்படுவது

98) கலித்தொகையைத் தொகுத்தவர் ............. நல்லந்துவனார்.

99) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை.............. பனையோலைகள்

100) பானை............ஒரு சிறந்த கலையாகும். வனைதல்

101) மட்டுமல்ல - பிரித்தெழுதுக. மட்டும் + அல்ல

102) கயிறு + கட்டில் - சேர்த்தெழுதுக. கயிற்றுக்கட்டில்

103) ' கூம்பொடு மீப்பாய் களையாது' - இத்தொடர் இடம்பெற்ற நூல்.......... புறநானூறு

104) கலையழகு மிகுந்த மண்கலங்கள் கிடைத்த ஊர்.............. நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூர்

105) பானை செய்யும் சக்கரத்திற்கு.......... என்று பெயர். திருவை

106) சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது.............. வேற்றுமைத்தொகை

107) செம்மரம் என்னும் சொல்...........த்தொகை. பண்பு

108) கண்ணா வா என்பது............த்தொடர். விளி

109) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைக்குச் சான்று........ பொற்சிலை

110) காலம் கரந்த பெயரெச்சம்........... வினைத்தொகை

111) அரசரை அவரது.............காப்பாற்றும். குற்றமற்ற

112) சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும்........தகுதி அறிந்து பேச வேண்டும். அவையின்

113) கண்ணோடாது - பிரித்தெழுதுக. கண் + ஓடாது

114) கசடற. - பிரித்தெழுதுக. கசடு + அற

115) என்று + ஆய்ந்து - சேர்த்தெழுதுக. என்றாய்ந்து.

குறுவினாக்கள் :

1) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது ?

ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ்கொண்டு தமிழ் வாழ்கிறது.

2) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது ?

வானம்வரை உள்ளடக்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளர்கிறது.

3) உலகம் எவற்றால் ஆனது ?

உலகம் நிலம்,நீர், தீ,காற்று, வானம் ஆகியவற்றால் ஆனது.

4) செய்யுளின் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது ?

செய்யுள் மரபுகளை மாற்றினால் பொருள் மாறிவிடும்.

5) ஓவிய எழுத்து என்றால் என்ன ?

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

தொடக்க காலத்தில் எழுத்து என்பது பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்ததால் அதனை ஓவிய எழுத்து என்பர்.

6) ஒலி எழுத்து நிலை என்றால் என்ன ?

ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

7) ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன ?

* புள்ளியிட்டு எழுதினால் ஓலைச்சுவடி சிதைந்துவிடும்.
* நேர்க்கோடிட்டு எழுதினால் ஓலைச்சுவடி கிழிந்துவிடும்.

8) வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்து சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு, ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும், ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.

9) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார் ?

ஓடை கற்களில் உருண்டும் தவழ்ந்தும் நெளிந்தும் சல சல என்று ஒலி எழுப்பியும் ஓடுகிறது.

10) ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாகக் குறிப்பிடுகிறார் ?

பெண்கள் பாடும் வள்ளைப்பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவது போல் உள்ளது.

11) கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது ?

எமனைப் போல வந்த பெருமழையும் சுழல் காற்றுமே கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகும்.

12) புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது ?

தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் புயலால் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன.

13) கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது ?

சித்தர்கள் வாழும் கொல்லி மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

14) விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை ?

பூமிக்கு அணுக்காமான வானம், காற்றின் தூய்மை, நீரின் உயர்வு ஆகியவற்றை விலைகொடுத்து வாங்கமுடியாது.

15) நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது ?

இந்த பூமி செவ்விந்தியர்களுக்குப் புனிதமானது. அவர்கள் இப்பூமியை எப்போதும் மறப்பதில்லை. இப்பூமி அவர்களின் தாயாகும். அவர்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்.

16) எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார் ?

செவ்விந்தியர்கள் வாழும் பகுதியில் எருமைகள் கொல்லப்படுவதையும் தொன்மையான மலைகள் மறைந்துத் தொலைபேசிக் கம்பிகள் பெருகுவதையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்கிறார்.

17) சான்றோர்க்கு அழகாவது எது ?

சான்றோர்க்கு அழகாவது நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே.

18) பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது ?

தன் குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால் பழியின்றி வாழலாம்.

19) புலித்தோல் போர்த்திய பசு என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது ?

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்தி பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

20) நோயின் மூன்று வகைகள் யாவை ?

1) மருந்தினால் நீங்கும் நோய். 2) எதனாலும் தீராத நோய். 3) முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தரும் நோய்.

21) நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை ?

நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகியன பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகும்.

22) நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை ?

நீண்ட நடைபயிற்சி, நல்ல காற்று, பசித்தபின் உண்பது ஆகியன நோய் அணுகாமல் காப்பவை.

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

23) அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகளாக கவிமணி குறிப்பிடுவன யாவை ?

அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறி நோய்வாய்ப்பட நேரிடும்.

24) மருத்துவம் எப்போது தொடங்கியது ?

தொடக்கத்தில் மனிதனுக்கு நோய் வந்தபோது இயற்கைத் தாவரங்களைக் கொண்டு நோய் தீர்த்தான். அப்போது முதல் மருத்துவம் தொடங்கியது.

25) நல்வாழ்விற்கு நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை ?

தினமும் 45 நிமிடம் நடைபயணம், 15 நிமிடம் யோகா, தியானம். 7 மணிநேரம் தூக்கம்,, 3 லிட்டர் தண்ணீர் அருந்துதல் ஆகியன அவசியம்.

26) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை ?

தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி முதலியவை மருந்துகளாகப் பயன்படுபவை.

27) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை ?

கல்வி கற்றவர்க்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை.

28) யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது ?

மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது.

29) பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது ?

பகைவர்களிடம் நாம் அன்பு காட்டுதல் வேண்டும்.

30) இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.கூறுவன யாவை ?

குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது.

31) தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது ?

தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறக்கிறது.

32) திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

இளங்கோ, திருத்தக்கதேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி

33) தமிழ் இசையோடு இணைந்து இணைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரா கூறுவன யாவை ?

புல்லாங்குழல், முழவு

34) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை ?

பண்பு எனப்படுவது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.
அன்பு எனப்படுவது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல்.

35) முறை,பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது ,?

முறை எனப்படுவது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்.
பொறை எனப்படுவது தம்மை இகழ்வாரைப் பொறுத்தல்.

36) எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம் ?

மண் பொம்மைகள் செய்தல், மரப்பொம்மைகள் செய்தல், காகிதப்பொம்மைகள் செய்தல், தஞ்சாவூர்த்தட்டு செய்தல், சந்தனமாலையும் ஏலக்காய் மாலையும் செய்தல் ஆகியன.

37) மண்பாண்டம் - சுடுமண் சிற்பம் ஒப்பிடுக.

மண்பாண்டம் : களி மண்ணை ஒரு நாள் முழுவதும் ஊறவைத்து அதனுடன் மெல்லிய மணல், சாம்பல் சேர்த்து சக்கரத்தால் செய்வது மண்பாண்டம்.
சுடுமண் சிற்பம் : களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை சுடுமண் சிற்பங்கள்.

38) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை ?

கிலுகிலுப்பை பொம்மைகள், பொருள்களை வைத்துக்கொள்ள உதவும் சிறிய கொட்டான், கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய் ஆகியன.

39) நன்மையைத் தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழி யாது ?

ஒரு செயலை இந்தவகையால் இவர் செய்துமுடிப்பார் என்று ஆராய்ந்து அச்செயலை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

40) சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது ?

எதையும் நன்கு ஆராய்ந்து ஒருபக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.

41) அரசன் தண்டிக்கும் முறை யாது ?

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது அரசனின் கடமை.

42) சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன ?

கேட்பவரைத் தன்வயப்படுத்துவதும் கேளாதவரைக் கேட்கத் தூண்டுவதும் சிறந்த சொல்லாற்றலின் இயல்பாகும்.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன், பட்டதாரி ஆசிரியர்,

தி.ஆ.மேனிலைப் பள்ளி, திருவிடைமருதூர்

செல் : 9443740120

.

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com